**சார்பு நீதிமன்றம், இலால்குடி.**

நாள்: 22.11.2022 செவ்வாய்கிழமை
O.S.No. 407/2018 PW1: ராஜசிம்மன்
C/W.84/2021

**(சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்)**

(1 முதல் 3 வரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.)

4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் தான் சொன்னேன். வழக்கு சொத்துக்கள் ஆதியில் எனது தாத்தா ஆண்டியப்பனுக்கு சொந்தமானது. அவருக்கு ஆறுமுகம், அங்கப்பன், ராமையன் ஆகியோர் வாரிசுகள். அவர்களுக்குள் பாகம் நடந்தது எனக்கு நேரடியாக தெரியாது எனது பாட்டி சின்னப்பொண்ணு சொன்னார். எந்த ஆண்டு எந்த தேதியில் யார் யார் முன்னிலையில் பாகம் பிரிந்தது என்று சொன்னரா என்றால் பிரித்து எல்லாம் கொடுக்கவில்லை. ஆண்டியப்பன் மற்றும் சின்னப்பொண்ணுக்கு வாரிசு சான்றிதழ்கள் தாக்கல் செய்யவில்லை. பிரிவினை ஆகாத சொத்தை ராமையா அனுபவித்தார். ராமையா எந்த ஆண்டு வீடு கட்டினார் என்று எனக்கு தெரியாது. ராமையா மனைவி சின்னப்பொண்ணு தான் சொன்னார். எந்த வருடம் வீடு கட்டப்பட்டது என்று சொல்லவில்லை. 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு OS.No.84/2021 வழக்கு சொத்தில் பாகம் உள்ளது என்றால் சரியல்ல. அவை என் அண்ணன் ஜெயசிம்மன் சுயமாக சம்பாதித்த சொத்துக்கள். நான் OS.No.407/2018 வழக்கு சொத்து ஆதியில் நத்தம் சொத்து என்றால் சரிதான். இந்த சொத்தை அங்கப்பன் என்பவர் தான் நீண்டகாலமாக அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. வேலை கிடைக்கும்

வரை அனுபவித்து வந்தார். அவருக்கு எந்த ஆண்டு வேலை கிடைத்தது என்று தெரியாது. அவர் எந்த ஆண்டு வரை அனுபவித்து வந்தார் என்று எனக்கு தெரியாது. அங்கப்பன் நீண்டகாலமாக அனுபவித்து வந்து அதை 07.02.1967 லில் கந்தசாமி என்பவருக்கு ஈட்டுகடன் பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றால் தெரியாது. அந்த பின்னர் மீட்டு அவரே அனுபவித்து வந்தார் என்றால் தெரியாது. அவரது இறப்பிற்கு பிறகு அவரது மனைவி ராஜாத்தி, மகள் ஜெயமணி ஆகியோர் அனுபவித்தார் என்றால் சரியல்ல. அங்கப்பன் இறந்தபிறகு எனது தாத்தா மற்றும் அவரது வாரிசுகள் அனுபவித்தார்கள். ராமையா எந்த ஆண்டு இறந்தார் என்றால் தெரியவில்லை. ராமையா அங்கப்பனுக்கு முன்பே இறந்துவிட்டார் அப்படியானால் அங்கப்பன் இறந்த பிறகு அங்கப்பன் சொத்தை ராமையா அனுபவிக்க முடியாது என்றால் ராமையாவின் வாரிசுகள் 2016 வரை அதே வீட்டில் தான் இருந்தார்கள். அதற்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா என்றால் அவர்களது முகவரி சம்மந்தப்பட்ட ஆவணங்கள் அந்த முகவரிக்கு தான் இருக்கிறது. வீட்டு வரி ரசீதுகள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. அங்கப்பன் 1992 ல் இறந்துவிட்டார் என்றால் அதன் பிறகு ராஜாத்தி அம்மாள் ஜெயபாலனை வளர்ப்பு மகனாக எடுத்துக் கொண்டு OS.No.407/2018 வழக்கு சொத்தை ஜெயபாலன் பெயரில் உயில் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அந்த உயில் ஆவணத்தில் அவரது மகள் ஜெயமணி சாட்சி கையெழுத்து போட்டியிருக்கிறார் என்றால் சரிதான். ராஜாத்தி அம்மாள் 17.04.2010 அன்று இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் இறந்த பிறகு ஜெயபாலன் தான் சொத்தை அனுபவித்தார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் வழக்கு சொத்து காலிமனையாக இருந்தது என்றால் இருந்த வீடு இடிந்ததால் காலிமனையாக இருந்தது. இடிவதற்கு முன்பு அதன் கதவு எண். 56. சர்வே எண்.19 1A 1B. அதன் புது எண்.2016. உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் வீடு கட்ட ஜெயபாலன் பஞ்சாயத்தில் அனுமதி வாங்கி சொந்த பணத்தை கொண்டு வீடு கட்டினார் என்றால் சரிதான். அதன் பிறகு அவர் பெயரில் வீட்டு வரி விதிக்கப்பட்டது

என்றால் சரிதான். சென்ற 31.12.2014 அன்று ஜெயபாலன் தாவா சொத்தை பொறுத்து 4ம் பிரதிவாதிக்கு அனுபவ பாத்தியம் கொடுத்து 5ம் பிரதிவாதிக்கு சொத்தின் உரிமை கொடுத்து உயில் ஆவணம் எழுதி பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஜெயபாலன் 25.01.2015ல் இறந்து விட்டார் என்றால் சரிதான். அதன் பிறகு 4 முதல் 6 பிரதிவாதிகள் இந்த தாவா சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் அவர்களும் இருக்கிறார்கள். நானும் அதே வீட்டில் தான் இருக்கிறேன். உரிமையாளர் என்ற முறையில் 5ம் பிரதிவாதி வீட்டுவரி செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். அதனால் எனக்கும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் வழக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்து 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு பாத்தியம் என்றும் அதில் பங்கு பத்தியம் கோர எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. அதனால் அசல் வழக்கு எண். 407/2018 தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண். 84/2021 சொத்துக்களை எனது அண்ணன் ஜெயசிம்மன், வேலாயுதம் என்பவரிடமிருந்து வாங்கினார். எந்த தேதியில் வாங்கினார் என்று ஞாபகம் இல்லை. 2001ல் வாங்கினார். அவர் 13 வருடங்களாக காணாமல் போய்விட்டார். அவர் இறந்ததாக நான் சொல்லவில்லை. திரும்பி வருவார் என்று நம்புகிறேன். எனது அப்பா இருக்கும் போது அவரை காணவில்லை என்று புகார் கொடுத்தார். அதற்கு ரசீது இருக்கிறதா என்றால் என் அப்பாவிடம் இருந்தது.  எனது அண்ணன் நெல், அரிசி வியபாரம் பார்த்தார். அதில் என்ன வருமானம் வரும் என்று எனக்கு தெரியாது. எனது அண்ணன் 2002ல் அசோகா மார்டன் ரைஸ்மில்லில் வேலை பார்த்த போது அவருக்கு மாத வருமானம் 4000 கொடுத்தார்கள். அதன்  ரைஸ்மில்லின் உரிமையாளர் யார் என்று தெரியாது. அவரை விசாரித்தால் உண்மை தெரியும் என்றால் சரிதான். அவரை நான் விசாரிக்க போவதில்லை. அந்த சொத்தை வாங்குவதற்கு எனது அண்ணனுக்கு வருமானம் எதுவும் இல்லை என்றும்,அவருக்குஅப்போது 21 வயது தான் ஆனது என்றும், இந்த சொத்துக்களை கிரயம் வாங்க ஜெயபாலன் தான் ஒப்பந்தம் போட்டார்

என்றும் கிரய தொகையும் அவர் தான் கொடுத்தார் என்றால் சரியல்ல. கிரய ஒப்பந்தத்தின் அசல் 4 முதல் 6 பிரதிவாதிகளிடம் இருக்கிறது என்றால் சரிதான். ஜெயபாலனால் பணம் கொடுக்கப்பட்டு பெயரளவில் ஜெயசிம்மன் பெயர் கிரய பத்திரத்தில் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் தான் கிரய பத்திர அசல் 4 முதல் 6 பிரதிவாதிகளிடம் இருக்கிறது என்றால் சரியல்ல. 13 வருடங்களாக ஜெயபாலன் காணாமல் போய்விட்டதால் அவர் இறந்ததாக கருதப்படும் வகையில் அவரது வாரிசுகளான 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கும், எனக்கும் பாகம் வரும் என்றால் நான் மட்டும் தான் வாரிசு. பணம் கொடுத்து கிரயம் வாங்கியது ஜெயபாலன் என்பதால் 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு பங்கு உண்டு என்றால் சரியல்ல. ஜெயசிம்மனுக்கு தனிப்பட்ட முறையில் அவை கிரய பாத்திய சொத்துக்கள் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண். 84/2021 சொத்தை நான் தான் அனுபவிக்கிறேன், அதன் சர்வே எண். 745, அதன் விஸ்தீரனம் முக்கால் ஏக்கர். அந்த சொத்தை அனுபவவித்தற்கு சாகுபடி கணக்கு தாக்கல் செய்யவில்லை. கூட்டுப்பட்டாவில் இருக்கிறது. தனிப்பட்டா வாங்கவில்லை. அசல் வழக்கு எண். 84/2021 கூறிய படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

/Signed/
ராஜசிம்மன்

/Signed /
A.B.நசீர் அலி, B.A.,B.L.,
சார்பு நீதிபதி(FAC)
இலால்குடி